Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

## பல்கலைக்கழக மானியக்குழு வழிகாட்டுதலில்

## சண்முகா கல்லூரியில் பயிலரங்கம்

பல்கலைக்கழக மானியக்குழு நிதி நல்கையுடன், தேசிய தர மதிப்பீடு மற்றும் தரச் சான்றுக்குழு - பரமார்ஷ் திட்டத்தில் நடைபெற்ற பயிலரங்கை, திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியும் திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியும் இணைந்து நடத்தியது.

இப்பயிலரங்கிற்குக் கல்லூரியின் தலைவர் ஜி. புல்லையா தலைமை தாங்கினார். செயலர் மற்றும் தாளாளர் டி.ஏ.எஸ்.முத்து முன்னிலை வகித்தார். கல்லூரியின் பொருளாளர் எம்.சீனுவாசன், கல்விப்புல முதன்மையர் பேராசிரியர் அழ.உடையப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் முதல்வர் முனைவர் கே.ஆனந்தராஜ் முன்னதாக அனைவரையும் வரவேற்றார். இதற்கான ஏற்பாட்டினை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி தேசிய தர மதிப்பீடு மற்றும் தரச் சான்றுக்குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி.முருகன் மற்றும் குழுவினர்கள் செய்திருந்தனர். பயிலரங்கின் நிறைவில் துணை முதல்வர் முனைவர் கோ.அண்ணாமலை நன்றியுரையாற்றினார்.

இப்பயிலரங்கில் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி முதுகலை கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் எஸ்.சகாயராஜ், கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் எல். ரவி, முதுகலை கணினிப் பயன்பாட்டியல் துறைத்தலைவர் முனைவர் ஜார்ஜ் லூயிஸ் ராஜா உள்ளிட்டோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

மாலை வரை நடைபெற்ற இப்பயிலரங்கில் கல்லூரியின் அனைத்துத் துறைத்தலைவர்கள் பேராசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த பேராசிரியர்களும் கலந்துகொண்டு பயனடைந்தனர். தேசிய தர மதிப்பீடு மற்றும் தரச் சான்றுக்குழு வழங்கும் தகவல்களை இப்பயிலரங்கில் வல்லுநர்கள் எடுத்துரைத்தனர். பேராசிரியர்களின் ஐயங்களை தெளிவுபடுத்தியதோடு, பேராசிரியர்கள் தங்களை எவ்வாறு ஆய்வு நோக்கில் கொண்டு செல்ல வேண்டும் என்றும், தேசிய தர மதிப்பீடு மற்றும் தரச் சான்று வழங்கும் குழு உயர்கல்வி நிறுவனங்களில் என்ன திட்டங்களையும் தரத்தையும் எதிர்பார்க்கிறது என்பதையும் விளக்கிக் கூறினர்.கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தாளாளர்


SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE
SACRED HEART COLLEGE (AUTONOMOUS), TIRUPATTUR
Jointly Organising
WORKSHOP ON UNDERSTANDING THE ACCREDITATION PROCESS IN VIEW OF THE NEW RAF
UGC – PARAMARSH SCHEME
INTERNAL QUALITY ASSURANCE CELL
2021, Venue : Seminar Hall, Shanmuga Industries Arts and Science College, Tiruvannamalai.
Hearty Welcome to all


SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE
SACRED HEART COLLEGE (AUTONOMOUS), TIRUPATTUR
Jointly Organising
WORKSHOP ON UNDERSTANDING THE ACCREDITATION PROCESS IN VIEW OF THE NEW RAF
UNDER UGC – PARAMARSH SCHEME
INTERNAL QUALITY ASSURANCE CELL
Date : 17th March – 2021,Venue : Seminar Hall, Shanmuga Industries Arts and Science College, Tiruvannamalai.
Hearty Welcome to all